தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

# பெரம்பலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(03.08.2024 முதல் 07.08.2024)

அறிக்கைஎண்: 36/2024 தேதி : 02.08.2024

## பெரம்பலூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35 - 39 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 29 - 30 °செ ஆகவும் பதிவானது.

## பெரம்பலூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (03.08.2024 முதல் 07.08.2024).

| கடந்த வார வானிலை (30.07.2024 முதல் 01.08.2024) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (03.08.2024 முதல் 07.08.2024) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 30/07 | நாள்-2 31/07 | நாள்-3 01/08 | தேதி | நாள்-1 03/08 | நாள்-2 04/08 | நாள்-3 05/08 | நாள்-4 06/08 | நாள்-5 07/08 |
| 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 2 | 2 | 1 | 2 | 6 |
| 35 | 38 | 39 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 38 | 38 | 37 | 37 | 37 |
| 29 | 30 | 29 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 27 | 27 | 26 | 26 | 26 |
| 5 | 5 | 5 | மேகமூட்டம் (ஆக்டா) | 7 | 8 | 7 | 8 | 7 |
| 69-51 | 70-52 | 72-57 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70-30 | 70-40 | 70-50 | 70-40 | 70-40 |
| 5 | 6 | 6 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 12 | 10 | 14 | 10 | 10 |
| மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு | தெற்கு | தென் மேற்கு |

## பெரம்பலூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 03.08.2024 முதல் 07.08.2024 ஆகிய தினங்களில் லேசான தூரல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 37 - 38 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26 - 27 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40 - 50 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 10 - 14 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| பொது | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பரிந்துரைக்கப்பட்ட வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது (TNAU AAS, Meghdoot and DAMINI). |

| | | |
|---|---|---|
| நெல் | நடவு வயல் | தற்போது நிலவும் வானிலையின் காரணமாக குறுவை நெற்பயிரில் ஆனைக்கொம்பன் ஈ தாக்கம் பரவலாக தென்படுகிறது. இதனால் பயிரின் குருத்துப் பகுதி வெங்காயத் தாள் போல் மாறி கதிர்கள் வெளிவராது. இதன் பரவலை தடுக்க குளோர்பைரிபாஸ் 20 EC 500 மில்லி/ எக்டர் என்ற அளவில் பயன்படுத்தவும். |
| நெல் | நடவு வயல் | குறுவை நெற்பயிரில் கதிர் தோன்றும் பருவத்தில் 1 ஏக்கருக்கு 35 கிலோ யூரியாவையும் 10 கிலோ முரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தினையும் கலந்து வயலில் சீராக தண்ணீர் வைத்து தூவவும். |
| வாழை | | வாழை மரங்கள் காற்றினால் சாயாமல் இருக்க, வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| கால்நடைகளுக்கு | வெள்ளாடு | வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளில் வெளிப்புற ஒட்டுண்ணிகளை நீக்கி 2 மில்லி பூட்டாக்ஸ் மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீர் கலந்து ஆடுகளின் வெளிப்புறங்களில் பூச வேண்டும். |

## குறுஞ்செய்தி

காற்றினால் ஏற்ப்படக் கூடிய ஈரப்பத இழப்பினைக் குறைக்க, நீர் பாசனத்தினை அதிக அளவில் பாய்ச்சவும்

**இயக்குநர்**